25.04.2025

O.S.No.313/2017

வா.சா.2.திரு.கருப்பையா த.பெ.மூக்கன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

இந்த வழக்கை ராமர் தாக்கல் செய்துள்ளார். ராமரின் தாயார் பெயர் அழகம்மாள். அழகம்மாள் இறந்து சுமார் 4, 5 ஆண்டுகள் இருக்கும். தாவா சொத்தின் சர்வே எண்.379/9சி1ஏ என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 17 செண்ட் இருக்கும். எனது தகப்பனார் அழகம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து இந்த வழக்கிற்கு கட்டுப்பட்டது அல்ல என்றால் தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்டது. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு தனி பட்டா பெற்றுவிட்டார் என்றால் சரிதான். அதன் சர்வே எண்.379/9சி1பி ஆகும். தாவா சொத்தான சர்வே எண்.379/9சி1ஏ ல் நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் அழகம்மாள் உயிருடன் இருந்தபோது நாங்கள் பணம் கொடுத்திருந்தோம். அவர் அந்த சொத்தை எழுதி கொடுக்கும் முன்பு இறந்துபோனார். சர்வே எண்.379/9சி1ஏ ல் 2 செண்டை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் எனது சகோதரர் தான் கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரையம் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது 04.06.2020 ல் எனது சகோதரர் பாரதிராஜா பெயரில் கிரையம் பெற்றுள்ளோம். தாவா சொத்தில் எனது சகோதரர் பாரதிராஜாவிற்கு பாத்தியம் இருப்பதாக நான் சொல்லுகிறேன் என்றால் சரிதான். எனது சகோதரர் மேற்கூரியவாறு கிரையம் பெற்றபோது இந்த வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது சகோதரர் கிரைய ஆவணத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. எனது சகோதரர் கிரையம் பெற்ற 2 செண்ட் அழகம்மாள் உயிருடன் இருந்தபோது நாங்கள் கிரையம் தொகை கொடுத்ததில் இருந்து எங்கள் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். அழகம்மாளுக்கு நாங்கள் பணம் கொடுத்து 4 ஆண்டுகள் கழித்து அவர் இறந்துபோனார். மேற்படி 2 செண்டிற்கு வடக்கே தான் மூக்கம்மாள் கட்டியுள்ள வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் மூக்கம்மாள், தனது மகன் பாண்டி ஆகியோருடன் குடும்பமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்தவீடு கட்ட ஆரம்பித்து சுமார் 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த வீட்டின் வெளிபூச்சு மட்டும் நிலுவையில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கீழ்புறம் ஆஸ்பட்டாஸ் கூரை வைத்த கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அதிலும் மூக்கம்மாள் தான் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆஸ்பட்டாஸ்கூரை கட்டிடத்தின் கீழ்புறம் குளியல் தொட்டி உள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழ்புறம் தான் கண்மாய் புறம்போக்கு என்றால் சரிதான். மூக்கம்மாள் ஆஸ்பட்டாஸ்கூரை கட்டிடம், செண்ட்ரிங்வீடு, குளியல் தொட்டி ஆகியவற்றை வேலி அமைத்து பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். கீழையூரை சேர்ந்த அழகப்பனை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவருக்கு எங்கள் ஊரில் பூர்வீகமாக சொத்து உள்ளதா என்பதனை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பானர் அழம்மாளிடமிருந்து 2 கிரைய ஆவணமூலம்

கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அழகம்மாளுக்கு அந்த இடம் எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் அவர் அனுபவித்து வந்தார். எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து கீழையூரை சேர்ந்த அழகப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் அழகம்மாளின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

3. அழகம்மாள் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு வடபுறம் கிருஷ்ணன் தகப்பனார் அழகப்பன் என்பவர் கீழையூரை சேர்ந்த அழகப்பனிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணன் உடன் பிறந்தவர்கள் 5 நபர்கள் என்றால் சரிதான். கிருஷ்ணனின் தகப்பனார் அழகப்பன் காலத்திற்கு பின்பு கிருஷ்ணன் வகையறாவிடமிருந்து பிரதிவாதி அந்த சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதியை நான் தெரிந்து கொண்டே இந்த வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிய 60 ஆண்டுகளாக அந்த இடத்திற்கு யாரும் வந்தது கிடையாது. தாவா சொத்தை அழகம்மாள் அனுபவித்து வருவதாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்ற 15 செண்டிற்கு வடபுறம் அழகம்மாள் அனுபவித்து வருவதாக சொல்வது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. எனது சகோதரர் கிரையம் பெற்ற 2 செண்டை பொறுத்து இன்னும் பட்டா பெறவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தில் எனது சகோதரர் வீடு கட்டியுள்ளார் என்றால் சாட்சி முதலில் வீடு கட்டியுள்ளார் என்று சொல்லிவிட்டு தற்போது தானாக முன்வந்து காலியிடமாக இருப்பதாக சொல்லுகிறார். வாதி ராமன் சொல்லி கொடுத்தன் பேரில் தாவா சொத்தின் அனுபவம் சம்மந்தமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.